**அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்**

**அரண்வாயல் குப்பம், திருவள்ளூர் மாவட்டம் - 602 025.**

**சுற்று மடல் எண்: 012/2022** **நாள்: 26.11.2022**

**'சலனமில்லா மனதினிடம் இந்தப் பிரபஞ்சம் தன்னைக் கையளிக்கின்றது' – லாவோட்சே**

# என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!

**நெஞ்சம் நிறைந்து அன்போடு உங்களை வாழ்த்துகிறேன்.**

**திருவருகைக் காலம்** வந்தாலே நம் நினைவுக்கு வருவது
வளையமும் நான்கு திரிகளும் தான்.
ஏதோ சடங்காக இவைகளை ஏற்றி முடிக்கிறோம்.
ஆனால் அவை நமக்குச் சொல்லும் பாடங்களை
நாம் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.




இவ்விடத்தில் எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது.
டைட்டானிக் கப்பல் மூழ்கிக்கொண்டிருந்த போது
நீங்கள் அந்தக் கப்பலில் இருந்தால்,
கப்பலின் மேல் தளத்தில் உள்ள இருக்கைகளை
ஒழுங்குபடுத்திக் கொண்டிருப்பீர்களா?
என ஒருவர் மற்றவரிடம் கேட்டார்.
அவரோ எப்படி அப்படியொரு முட்டாள் தனமான வேலையை
அந்த நேரத்தில் செய்து கொண்டிருப்பேன்?
எனக் கோபமாகப் பதில் கூறினார்.

ஆனால் உண்மையில் பல சமயங்களில்
நாம் அப்படித்தான் நடந்து கொள்கிறோம்.
நம்மைச் சுற்றி ஆபத்தான எத்தனையோ காரியங்கள்
நடந்து கொண்டிருக்கும் போது நாம் அவசியமற்ற
பலகாரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம்.

இத்திருவருகைக் காலம் காலத்தின் சூழல்களை
அறிந்து கொண்டு ஆண்டவரின் வழியில் நடக்க
நமக்கு ஞானத்தைத் தர மன்றாடுவோம்.
திருவருகைக் காலத்தின் 4 திரிகளும்

நான்கு உன்னதமான விழுமியங்களை
நமக்கு எடுத்துக் காட்டுகின்றன என்பது நாம் அறிந்ததே!

**நம்பிக்கை, அன்பு, அமைதி, மகிழ்ச்சி** என்று

நம் வாழ்வு கட்டப்பட்டிருக்கும்
4 அடிப்படை விழுமியங்களை இவை குறிக்கின்றன.
இந்த நான்கு தூண்கள் இல்லை எனில்
நம் வாழ்க்கைக் கட்டிடம் நிலையாக நிற்க இயலாது.
எனவே இந்த நான்கின் அவசியத்தையும்
உணர்ந்தவர்களாய் அதனை நம்மிலும்
மற்றவர்களிலும் வளர்த்தெடுக்க முயல்வோம்.

**நம்பிக்கை** என்பது இல்லாமலா இத்தனை காலம் வாழ்கிறோம்?

என்று நமக்கு எண்ணத் தோன்றுகிறதல்லவா?
உண்மையில் நம்பிக்கை என்பது என்ன என்பதைப்
பின்வரும் நிகழ்வு எனக்கு உணர்த்தியது.
ஜெர்மனியில் நாசிப்படை முகாமில்
இராணுவ வீரர்களால் யூதக்குடும்பம் ஒன்று சிறைபிடிக்கப்பட்டது.
தாய், வேறு முகாமுக்கு அனுப்பப்பட 4 வயது சிறுவன்
தந்தையோடு இந்த முகாமில் இருந்தான்.
எதுவும் அறியாத இச்சிறுவனுக்கு
என்ன சொல்வது என எண்ணினார் தந்தை.
மகனிடம் இவ்வாறு கூறினார் “கண்ணே! இங்கே
நாம் ஒரு போட்டி விளையாட்டுக்காகத் தங்கியிருக்கிறோம்.
இந்தப் போட்டி விளையாட்டில் நாம் வெற்றி பெற வேண்டும்.
“நாம் வீட்டிற்குப் போக வேண்டும் என்று நீ
சொல்லாவிட்டால் அதற்கு 20 புள்ளிகள்.
“எனக்கு பசிக்கிறது என்று சொல்லவில்லை
என்றால் 10 புள்ளிகள்.
அதிக புள்ளிகள் வாங்கினால் வெற்றி பெற்று
பரிசு பெறுவோம் என்றார். மகன் கேட்டான்
அப்பா என்ன பரிசு கிடைக்கும்? அப்பா சொன்னார்
“மிகப் பெரிய பீரங்கி வண்டி பரிசாகக் கிடைக்கும்”.
நாட்கள் நகர்ந்தன. சிறுவன் பரிசு பெறுவதிலேயே குறியாய் இருந்தான்.
ஒரு நாள் அந்தத் தந்தை இராணுவ வீரர்களால்
இழுத்துச் செல்லப்பட்டார். மகன் தன்னைப் பார்க்கிறான்
என்பதைத் தெரிந்து கொண்ட தந்தை



வீரமாக இராணுவ வீரர்களோடு நடந்து சென்றார்.
அப்பால் கொண்டு செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.
அன்று நடந்த போரில் ஜெர்மன் தோற்றது.
அடுத்த நாள் காலை அமெரிக்காவின்
பீரங்கி வண்டி முகாமுக்கு வந்து நின்றது.
தந்தை இறந்ததைக் கூட அறியாத சிறுவன்
போட்டியில் வெற்றி பெற்று விட்டோம்.
பீரங்கி வண்டி வந்திருக்கிறது என மகிழ்ந்து போனான்.
உண்மையில் அமெரிக்க படைகள்
இவர்களை விடுதலை செய்யவே வந்திருந்தன.

**அன்புக்குரியவர்களே!** நெஞ்சை உருக வைக்கும்
இந்நிகழ்வுக்குப் பெயர் நம்பிக்கை.
நம்பிக்கைக் கீற்று துளிகூட இல்லாதபோதும்
நம்பிக்கையோடிருக்க முடியுமா? முற்றிலும் இருட்டாயிருந்தாலும்
வெளிச்சம் வரும் என நம்புவதுதான் நம்பிக்கை.
எல்லாம் சுகமாகவும் சுமூகமாகவும் இருக்கும்போது நம்புவது எளிது.
இப்படி அவநம்பிக்கைச் சூழலில்
நம்பிக்கையை விதைப்பதுதான் **கிறிஸ்து பிறப்பு.**




**நாம் வாழும் இடங்களில் நம்பிக்கையைத் துளிர்க்கச் செய்கிறோமா?**

**இல்லை நமது பிரசன்னம் நம்பிக்கையை வற்றிப்போகச் செய்கிறதா?**

வாழும் இடங்களில், குழுமங்களில், பணித்தளங்களில்
பங்குத் தளங்களில் நம்பிக்கை மனிதர்கள் தேவைப்படுகிறார்கள்.
இன்றைய உலகம் அவநம்பிக்கையை அதிகம் பரப்புகிறது.
நம் காதில் விழும் செய்திகளும்
கண்களில் படும் நிகழ்வுகளும் உலகம் எழமுடியாத
அவநம்பிக்கைப் பாதாளத்தில் இருப்பது போல் தோற்றமளிக்கிறது.
இதைக் கடந்து செல்ல வேண்டுமானால்
கேள்விக்கு உட்படுத்தப்படாத சந்தேகத்தின் சாயல் இல்லாத
தீவிரமான நம்பிக்கைத் தேவை.
ஆண்டவரில் ஊன்றியிருக்கும்போது மட்டுமே இது சாத்தியமாகும்.
இத்திருவருகைக் காலத்தில் இதனைப் பயிற்சி செய்வோம்.

**அன்பு** என்ற அடுத்த திரி அன்பு செய்ய நம்மை அழைக்கிறது.

ஆனால் ஒரு படி மேலாகச் சென்று 22 -வது பொதுப் பேரவையில்
பேரன்பில் வாழ நாம் உறுதி செய்திருக்கிறோம்.

கடவுளின் பேரன்புதானே கிறிஸ்து பிறப்பு
இந்தப் பேரன்பு நம்மில் வெளிப்பட்டால்
நாம் வாழும் இடங்கள் சொர்க்கமாக அல்லவா இருக்க வேண்டும்.
அன்பு கூட இன்று தோற்ற மயக்கங்களில்
சிக்கிக் கொண்டது போல் காட்சி தருகிறது.
இதுவரை அன்புக்காகச் சொல்லப்பட்ட அத்தனை அடையாளங்களிலும்
இன்று ஏதாவது குறை தென்படுகிறது.

தாய்மை, தோழமை, சேவை, காதல், குடும்பம், நட்பு
இப்படி அன்பின் பரிமாணங்கள் அத்தனையிலும்
ஏதாவதொரு கறைபடிந்திருப்பது போல் தோன்றுகிறது.
இப்படிப்பட்ட சூழலில் பேரன்பை உறுதிப்பாட்டோடு
வாழ்ந்து காட்டுவது மிகப்பெரிய சவால்.
ஆண்டவரில் அன்றாடம் தோய்ந்து போனால் மட்டுமே இது சாத்தியமாகும்.
இயன்றவரை பேரன்புக்குள் நம்மைக் கையளிப்போம்.
மகிழ்ச்சியும், அமைதியும், நம்பிக்கை, அன்பு
ஆகியவற்றிலிருந்தே பிறப்பெடுக்கின்றன.
நம்பிக்கையையும் அன்பையும் வாழ்ந்துகாட்டினால்
மகிழ்ச்சியும் அமைதியும் இலவச இணைப்பாகக் கூடவே வந்து சேரும்.
**இத்திருவருகைக் காலத்தை இந்த 4 அடித்தளங்களால் வலுப்படுத்துவோம்.**

## பிரபஞ்சத்திற்கு நன்றி:

அலுவல் காரணமான நமது மேலைநாட்டுப் பயணம், பிரபஞ்சத்தின் பெரும் கருணையால் நலமாக அமைந்தது. உங்கள் ஒவ்வொருவரின் செபத்திற்கும் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது ஐரோப்பிய மறைபரப்புப் பணித்தளங்களில் பணியாற்றும் அனைத்து சகோதரிகளும் நலமாக உள்ளார்கள். உங்கள் ஒவ்வொருவருக்கும் தங்களின் அன்பைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். பனி, மழை, குளிர் என இயற்கையின் சவால்களைத் தாங்கிக்கொண்டு சாதாரணப் பணி செய்தாலும் அவர்கள் மறைபரப்புப் பணியாளர்களே! நம் சார்பாக எல்லையில், நாட்டுக்காகப் பணியாற்றும் இராணுவ வீரர்கள் போல் அரும் பணியாற்றும் நம் சகோதரிகளை நெஞ்சார வாழ்த்துவோம்.

## மாதக் கருத்தமைதி நாள்:

நமது மாதக் கருத்தமைதி நாளைக் கண்டிப்பாக 1/2 நாள் நடத்த வேண்டும் எனப் பொதுப்பேரவையில் முடிவெடுத்துள்ளோம். அதனை உங்களுக்கு நினைவூட்ட விழைகிறேன். தவறாது நமது தனிப்பட்ட ஆன்மீக வளர்ச்சிக்காக மாதக் கருத்தமைதி நாளைப் பயன்படுத்துங்கள்.

### தியானம்:

தியானம் செய்யும் சகோதரிகள் நன்முறையில் தியானம் செய்கிறீர்கள் என அறிந்து மகிழ்கிறோம். இந்தத் தியானத்தை வாழ்வாக்கி பிரபஞ்சம் நமக்குத் தரும் ஆனந்த அனுபவங்களைப் பெற்றுக் கொள்வோம். தியானத்தை மாற்றிக் கொள்ளும் சகோதரிகள் ஏதாவது ஒரு தியானத்தில் கலந்துகொண்டு பயன் பெறுங்கள்.

## மருத்துவப் பரிசோதனை:

ஏற்கனவே மருத்துவப் பரிசோதனைக்குப் பெயர் கொடுத்துள்ள சகோதரிகள் மருத்துவ பரிசோதனை செய்து பயனடைய அன்போடு கேட்டுக் கொள்கிறேன். **டிசம்பர் 5 முதல் மருத்துவப் பரிசோதனைக்கான பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது**. உங்கள் மாநிலத்தலைமைச் சகோதரிகள் உங்களுக்கான பரிசோதனை நாளை அறிவிப்பார்கள். இதுபற்றிய மேலும் தெளிவுகளுக்கு மைய சமூகப்பணி ஒருங்கிணைப்பாளர் சகோ. ரோஸ் மேரி (946) அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

*திருவருகைக் காலத்தை கருத்தோடு கடைபிடிப்போம்*

*நம்பிக்கை அன்பு மகிழ்ச்சி அமைதியை ஆழப்படுத்துவோம்.*

*வாழும் இடங்களில் வளர்த்தெடுப்போம்.*

*பேரன்பின் சமூகமாய் பெருமகிழ்வோடு வாழ்வோம்.*

### சபைத் தலைமை அன்னையின் டிசம்பர் மாதப் பணித்திட்டம்:

| | | |
|---|---|---|
| 01 | - | மயிலாப்பூர் கருணைக் குடில் இல்லக் கட்டிடத் திறப்பு |
| 02 | - | சபைத் தலைமையகம் |
| 03 | - | வெள்ளிவிழா சகோதரிகளுக்கான திருப்பலி - சபைத் தலைமையகம் |
| 04 | - | வட்டாரத் தலைமைச் சகோதரி பணி ஏற்பு - சபைத் தலைமையகம் |
| 05 - 08 | - | சபைத் தலைமையகம் |
| 09 - 10 | - | Sacred Heart Seminary – Symposium |
| 11 - 15 | - | அலுவலகப் பணிகள் |
| 16 - 24 | - | கிறிஸ்து பிறப்பு நவநாள், கிறிஸ்து பிறப்பு விழாக்கள் |
| 25 | - | சமபந்தி உணவு - கிறிஸ்து பிறப்பு விழா |
| 26 - 27 | - | அலுவலகப் பணிகள், சபைத் தலைமையகம் |
| 28 | - | அடைக்கலச் செல்வங்களுடன் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம் |

| | | |
|---|---|---|
| 29 - 30 | - | அலுவலகப் பணிகள், சபைத் தலைமையகம் |
| 31 | - | நன்றியின் நாள் |

**உங்கள் அனைவருக்கும் திருவருகைக்காலம்**

**இறையாசீர்வாதமாய் அமைவதாக!**

**என் அன்பும் செபமும் உங்களோடு இருக்கும்.**




&




பிரபஞ்சப் பேரன்பில்,

சபைத் தலைமை அன்னை